அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :131/2017

தேதி 07.11.2017

## தமிழறிஞரும் எழுத்தாளருமான பேராசிரியர் மா.நன்னன் மறைவு

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.

தமிழறிஞரும் எழுத்தாளருமான பேராசிரியர் மா.நன்னன் அவர்கள் உடல்நலக்குறைவால் மரணமடைந்த செய்தி மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. இவருடைய மறைவு தமிழ் ஆர்வலர்களுக்கும், தமிழ் பற்றுள்ளவர்களுக்கும் ஓர் பேரிழப்பாகும்.

இவர் “வெள்ளையனே வெளியேறு” இயக்கத்தில் பங்கேற்றதன் மூலம் விடுதலைப் போராட்டத்திலும் கலந்துக் கொண்டவர் என்ற பெருமையும் பெற்றவராவார். முதலில் தொடக்கப்பள்ளி ஆசிரியராக பணியைத் ஆரம்பித்து, பேராசிரியர் அளவுக்கு உயர்ந்தும், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குனராகவும் பதவி வகித்தார். இவருடைய தமிழ் புலமையும், தமிழறிவும் இவரை நினைத்து பார்க்கும் அளவுக்கு ஆற்றல் பெற்றிருக்கும்.

பேராசிரியர் மா.நன்னன் அவர்களின் மறைவு தமிழ் உணர்வுள்ளவர்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகும். அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர்களுக்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com